**செப்டம்பர் – 08**

# TNPSC துளிகள்

- தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், இலண்டனில் பாபா சாகேப் இலண்டன் பொருளியல் மற்றும் அரசியல் அறிவியல் கல்லூரியில் (LSE) பயிலும் போது தங்கியிருந்த டாக்டர் B.R. அம்பேத்கர் இல்லத்திற்கு வருகை தந்தார்.
- ஏர் இந்தியா SATS விமான நிலைய சேவைகள் (AISATS) ஆனது, ICAO (சர்வதேசப் பொது விமானப் போக்குவரத்து அமைப்பு) தரநிலைகளுடன் இணைக்கப்பட்ட புதிய கட்டமைப்பின் கீழ் DGCA (பொது விமானப் போக்குவரத்து இயக்குநரகம்) பாதுகாப்பு ஒப்புதலைப் பெற்ற இந்தியாவின் முதல் நிலக் கட்டுப்பாட்டு மேலாண்மை நிறுவனமாக மாறியது.
- ஐக்கியப் பேரரசின் லிவர்பூலில் நடைபெற்று வரும் 2025 ஆம் ஆண்டு உலகக் குத்துச்சண்டை சாம்பியன்ஷிப் போட்டியில் முதல் முறையாக ஆடவர் மற்றும் மகளிர் பிரிவு போட்டிகள் ஒன்றாக நடத்தப்படுகின்றன.
- கௌஹாத்தி பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையுடன் இணைந்து, அசாம் மாநிலத்தில் உள்ள We Foundation India தலைமையிலான குழு, கழுகு வளங்காப்பில் பணிபுரியும் தனிநபர்களை ஒரு வலையமைப்பிற்குள் இணைப்பதற்கான இந்தியாவின் முதல் தளத்தினைத் தொடங்கியது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## NIRF 2025 தரவரிசையில் தமிழ்நாடு




- அதிக எண்ணிக்கையிலான கல்லூரிகளுடன் முதல் 100 இடங்களில் தமிழ்நாடு இதில் முன்னணியில் உள்ளது.
- ஒட்டு மொத்தப் பிரிவில் முதல் 100 இடங்களில் 17 நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன.
- கல்லூரிகள் பிரிவில் முதல் 100 இடங்களில் 33 கல்லூரிகள் இடம் பெற்றுள்ளன.
- மாநிலப் பொது பல்கலைக் கழகப் பிரிவில் முதல் 50 இடங்களில் 10 நிறுவனங்கள் இடம் பெற்றுள்ளன.
- தமிழ்நாடு மாநிலத்தினைத் தொடர்ந்து 11 நிறுவனங்களுடன் மகாராஷ்டிராவும், 9 நிறுவனங்களுடன் உத்தரப் பிரதேசமும் இடம் பெற்றுள்ளன.
- டெல்லி 8 கல்லூரிகளுடன் வலுவான மையமாக உள்ளது.

# தேசியச் செய்திகள்

## கபாஸ் கிசான் செயலி





- ❖ மத்திய ஜவுளித் துறை அமைச்சகமானது, கபாஸ் கிசான் கைபேசி செயலியை அறிமுகப் படுத்தியுள்ளது.
- ❖ இந்தச் செயலியானது குறைந்தபட்ச ஆதரவு விலை (MSP) திட்டத்தின் கீழ் பருத்தி கொள்முதலை ஆதரிக்கிறது.
- ❖ இது விவசாயிகளின் சுயப் பதிவு, கொள்முதல் கால ஒதுக்கீடு முன்பதிவு மற்றும் கட்டணக் கண்காணிப்பைச் செயல்படுத்துகிறது.
- ❖ வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல், ஆவணம் சார்ந்த வேலைகளைக் குறைத்தல் மற்றும் அவசர விற்பனையைத் தடுப்பதே இதன் நோக்கமாகும்.

## புற்றுநோய் பதிவேடு 2025

- ❖ 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் 15.6 லட்சம் புற்றுநோய்ப் பாதிப்புகளும் 8.74 லட்சம் புற்றுநோய் தொடர்பான உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளன.
- ❖ மொத்தப் பாதிப்பில் சுமார் 51.1 சதவீதம் பேர் பெண்கள், ஆனால் நாடு முழுவதுமான மொத்தப் புற்றுநோய் உயிரிழப்புகளில் பெண்களின் பங்கு 45 சதவீதம் மட்டுமே ஆகும்.
- ❖ 14 பதிவுகளில், நுரையீரல் புற்றுநோயை விஞ்சி ஆண்களிடையே மிகவும் பொதுவான புற்றுநோயாக வாய்வழிப் புற்றுநோய் மாறியது.
- ❖ மார்பக மற்றும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய்கள் பெண்களில் உள்ள அனைத்துப் புற்றுநோய்களிலும் 40 சதவீதமாக இருந்தன, ஐதராபாத்தில் 100,000 பேருக்கு 54 என்ற அதிக மார்பகப் புற்றுநோய் விகிதம் பதிவாகியுள்ளது.
- ❖ ஆண்களில் 100,000 பேருக்கு 198.4 மற்றும் பெண்களில் 100,000 பேருக்கு 172.5 என்ற பாதிப்பு விகிதத்துடன், ஐஸ்வால் ஒட்டுமொத்தப் புற்றுநோய்ப் பாதிப்புகளில் மிக உயர்ந்த இடத்தைப் பிடித்துள்ளது.
- ❖ 2015 மற்றும் 2019 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் 43 மையங்களில் இருந்து பெறப் பட்ட புற்றுநோய்ப் பதிவேடு தரவுகள் அந்தக் காலக் கட்டத்தில் 7.08 லட்சம் பாதிப்புகளும், 2.06 லட்சம் உயிரிழப்புகளும் பதிவானதாக காட்டுகின்றன.
- ❖ புகையிலைப் பயன்பாடு, மது, நெருப்பில் சுட்ட உணவுகள் மற்றும் ஹெலிகோபாக்டர் பைலோரி மற்றும் HPV (மனித பாப்பிலோமா வைரஸ்) போன்ற தொற்றுகள் போன்ற வாழ்க்கை முறைக் காரணிகளால் வடகிழக்கு மாநிலங்களில் அதிகப் புற்றுநோய்ப் பாதிப்பு விகிதங்கள் பதிவாகியுள்ளன.

- ஸ்ரீநகரில், ஆண்களில் நுரையீரல் புற்றுநோய் பாதிப்பு 100,000 பேருக்கு 39.5 ஆகவும், புரோஸ்டேட் புற்றுநோய் 100,000 பேருக்கு 12.7 ஆகவும் பதிவாகியுள்ளது.
- ஐஸ்வாலில் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோய் விகிதம் 100,000 பேருக்கு 27.1 ஆகவும், அகமதாபாத்தில் ஆண்களில் வாய் புற்றுநோய் 100,000 பேருக்கு 33.6 ஆகவும் இருந்தது.
- மக்கள் தொகையில் 10 முதல் 18 சதவீதம் வரையிலான போக்குகளைக் கண்காணிக்கின்ற இந்தப் பதிவேடுகள் தற்போது 23 மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்களின் தரவுகளைக் கொண்டுள்ளது.





# சர்வதேசச் செய்திகள்

## தாய்லாந்து புதிய பிரதமர் 2025

- தாய்லாந்தின் நாடாளுமன்றம் ஆனது வணிக அதிபர் அனுடின் சார்ன்விரகுலை நாட்டின் பிரதமராகத் தேர்ந்தெடுத்துள்ளது.
- தாய்லாந்து இரண்டு ஆண்டுகளில் அதன் மூன்றாவது பிரதமரை நியமித்தது.
- கம்போடியாவுடனான எல்லைப் பிரச்சினையைக் கையாண்டதில் நெறிமுறை மீறல்களுக்காக பேடோங்டார்ன் ஷினவத்ரா சமீபத்தில் அரசியலமைப்பு நீதிமன்றத்தால் பதவி நீக்கம் செய்யப்பட்டார்.
- பேடோங்டார்ன் ஷினவத்ரா தாய்லாந்தின் மிகவும் அதிகாரம் வாய்ந்த அரசியல் வம்சத்தைச் சேர்ந்தவர்.
- 2023 ஆம் ஆண்டு தாய்லாந்து பொதுத் தேர்தலில் progressive Move Forward Party என்ற கட்சி வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, பியூ தாய் கட்சி மற்றும் conservative establishment parties கட்சி ஸ்ரெத்தா தாவிசின் கீழ் ஒரு கூட்டணி அரசாங்கத்தை அமைத்தன.
- ஸ்ரெத்தா 2024 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அரசியலமைப்பு நீதிமன்றத்தினால் பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்ற நிலையில் அவருக்குப் பிறகு பேடோங்டார்ன் ஷினவத்ரா பதவியேற்றார்.
- தாய்லாந்தின் அனுடின் சார்ன்விரகுல் பாராளுமன்ற வாக்கெடுப்பு மூலம் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- ஒரு காலத்தில் ஆதிக்கம் செலுத்திய ஷினவத்ரா குடும்பத்தின் ஆளும் கட்சியின் வேட்பாளரைத் தோற்கடித்து, ஒரு வார கால குழப்பம் மற்றும் அரசியல் முடக்கங்களை

அவர் முடிவுக்குக் கொண்டு வந்தார்.




## Power of Siberia 2 எரிவாயு குழாய்த் திட்டம்




- ரஷ்யாவும், சீனாவும் Power of Siberia 2 எரிவாயு குழாய்த் திட்டத்தை கட்டமைப்பதற்கான சட்டப்பூர்வ ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன.
- மேற்கு சைபீரியாவிலிருந்து மங்கோலியா வழியாக சீனாவிற்கு இயற்கை எரிவாயுவை கொண்டு செல்லும் வகையிலான இந்தக் குழாய்த் திட்டம் ஆனது தற்போதுள்ள Power of Siberia 1 குழாய் திட்டத்திற்கு ஒரு கூடுதல் சேர்க்கையாக அமையும்.
- Power of Siberia 2 திட்டம் ஆனது, Power of Siberia 1 திட்டத்திலிருந்து பெறப்படும் தற்போதைய 38 பில்லியன் கன மீட்டருடன் கூடுதலாக, 50 பில்லியன் கன மீட்டர் அளவிலான வருடாந்திர ஏற்றுமதித் திறனை அதிகரிக்கும்.

# பொருளாதாரச் செய்திகள்

## இரண்டு அடுக்கு சரக்கு மற்றும் சேவை வரிவிதிப்பு

- சரக்கு மற்றும் சேவை வரி (GST) சபையானது, அதன் 56வது கூட்டத்தில், 2025 ஆம்

ஆண்டு செப்டம்பர் 22 ஆம் தேதி முதல் அமலுக்கு வரும் வகையில் 5% மற்றும் 18% விகிதங்களைத் தக்க வைத்துக் கொள்ளும் வகையிலான இரண்டு அடுக்குக் கட்டமைப்பை அங்கீகரித்தது.

- புகையிலை, பான் மசாலா, கார்பனேற்றப்பட்ட பானங்கள், படகுகள், ஹெலிகாப்டர்கள் மற்றும் பெரிய கார்கள் உள்ளிட்ட சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கும் பொருட்கள் (பாவ) மற்றும் ஆடம்பரப் பொருட்களுக்கு 40% "சிறப்பு வரி விகிதம்" அறிமுகப்படுத்தப்பட்டது.
- சோப்பு, ஷாம்பு, பல் துலக்கும் தூரிகை, பற்பசை, இருசக்கர மிதிவண்டிகள் மற்றும் மேசைப் பயன்பாட்டுப் பாத்திரங்கள் போன்ற வீட்டு உபயோகப் பொருட்களுக்கு 12% அல்லது 18% ஆக விதிக்கப்பட்டிருந்த வரி விகிதம் தற்போது குறைக்கப்பட்டு 5% வரி விதிக்கப்படுகிறது.
- பாஸ்தா, உடனடி நூடுல்ஸ், சாஸ்கள், சாக்லேட்டுகள், காபி மற்றும் பேக் செய்யப்பட்ட நம்கீன்கள் போன்ற உணவுப் பொருட்கள் உயர் வரி விதிப்பு அடுக்குகளிலிருந்து 5% அடுக்கிற்கு மாற்றப்பட்டன.
- ரொட்டிகள், சப்பாத்திகள், பரோட்டாக்கள் உள்ளிட்ட இந்திய ரொட்டிகள் (வெதுப்பி உணவுகள்), அதி-உயர் வெப்பநிலையிலான (UHT) பால் மற்றும் பன்னீர் ஆகியவை 5% வரி அடுக்கிலிருந்து 0% அடுக்கிற்கு மாற்றப்பட்டன.
- 350cc வரை எஞ்சின் திறன் கொண்ட இரு சக்கர வாகனங்கள், சிறிய கார்கள், காற்றுப் பதன் கருவிகள் (AC), தொலைக்காட்சிகள் மற்றும் பாத்திரம் கழுவும் இயந்திரங்களுக்கு தற்போது 18% வரி விதிக்கப்படுகின்றன என்பதோடு இது 28% அடுக்கிலிருந்து மாற்றப்பட்டுள்ளன.
- வீட்டுவசதி மற்றும் உள்கட்டமைப்புத் துறைகளுக்கு பயன்படும் சிமெண்ட் 28% அடுக்கிலிருந்து 18% அடுக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.
- பேருந்துகள், லாரிகள், ஆம்புலன்ஸ்கள் மற்றும் அனைத்து ஆட்டோ பாகங்களுக்கு தற்போது ஒரே மாதிரியாக 18% வரி விதிக்கப்பட்டுள்ளன.
- 33 உயிர்காக்கும் மருந்துகள் மற்றும் நோயறிதல் கருவிகள் தற்போது 0% வரி அடுக்கிற்கும் (12% அடுக்கிலிருந்து மாற்றம்); கண்ணாடிகள் 28% அடுக்கிலிருந்து 5% அடுக்கிற்கும் மாற்றப் பட்டுள்ளன.
- உயிரிப் பூச்சிக்கொல்லிகள், உயிரி-மெந்தால், கைவினைப் பொருட்கள், பளிங்கு மற்றும் கிரானைட் அமைப்புகளுக்கு தற்போது 5% வரி விதிக்கப்பட்டுள்ளன என்ற நிலையில் இது 12% அடுக்கிலிருந்து மாற்றப்பட்டுள்ளது.
- மனிதனால் உருவாக்கப்பட்ட இழை மீதான வரியை 18 சதவீதத்திருந்து 5% ஆகவும், மனிதனால் உருவாக்கப்பட்ட நூல் மீதான வரியை 12 சதவீதத்திருந்து 5% ஆகவும் குறைப்பதன் மூலம் ஜவுளித் துறையில் தலைகீழ் வரி அமைப்பு சரி செய்யப்பட்டது.
- சல்பூரிக் அமிலம், நைட்ரிக் அமிலம் மற்றும் அம்மோனியா போன்ற உர உள்ளீடுகளுக்கு தற்போது 18% வரிக்குப் பதிலாக 5% வரி விதிக்கப்படுகின்றன என்பதோடு இது விவசாயச் செலவுகளைக் குறைக்கிறது.
- நிதிப் பாதுகாப்பை விரிவுபடுத்துவதற்காக தனிநபர் ஆயுள் மற்றும் சுகாதாரக் காப்பீட்டுக் கொள்கைகளுக்கு விதிக்கப்பட்ட 18% வரி தற்போது 0% ஆக மாற்றப் பட்டுள்ளது.
- புகையிலை, பான் மசாலா, குட்கா, சிகரெட், ஜர்தா மற்றும் பீடி மீதான 28% GST + இழப்பீட்டு வீத வரியானது, மத்திய அரசு வீத வரி தொடர்பான கடன்களை திருப்பிச் செலுத்தும் வரை தொடரும்.
- 2025 ஆம் ஆண்டின் இறுதிக்குள் இழப்பீட்டு வீத வரி மீதான கடன் மற்றும் வட்டிப் பொறுப்புகள் பூர்த்தி செய்யப்பட்டவுடன் இந்தப் புகையிலை தொடர்பான பொருட்கள்

40% வரி அடுக்குக்கு மாற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.


- இணக்கம் மற்றும் வரி வருவாய் மற்றும் GDP இடையிலான தொடர்பு ஆகியவற்றில் எதிர்பார்க்கப் படும் முன்னேற்றத்துடன், 2023–24 ஆம் ஆண்டின் நுகர்வு அடிப்படையில் விகிதக் குறைப்புகளால் 48,000 கோடி ரூபாய் வருவாய் பாதிப்பு மதிப்பிடப்பட்டுள்ளது.


GST 2.0 IS COMING SOON
PROPOSED GST REFORMS AT A GLANCE

| Category | Current GST | ProposedGST |
|---|---|---|
| Food & Textiles | 12% | 5% |
| Electronics(TV,AC, Fridge) | 28% | 18% |
| Small Cars | 28%+ Cess(~29%) | 18% |
| Luxury Cars/SUV | ~50% | 40% |
| Medicines | 12% | 5%/0% |
| Insurance (Life / Health ) | 18% | 5%/0% |
| FMCG ( Snacks, Juices Ketchup) | 12% | 5% |
| Cement | 28% | 18% |
| Salon Services | 18% | 5% |
| Cinema Ticket | 12% | 5% ( Economy)/ 18% ( Premium) |

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## சூரிய ஆற்றலூட்டப்பட்ட எலக்ட்ரான்கள்





- ESA (ஐரோப்பிய விண்வெளி நிறுவனம்) மற்றும் நாசாவின் சூரிய சுற்றுக்கலம் (ஆர்பிட்டர்) ஆகியவை சூரியனில் இருந்து சூரிய ஆற்றலூட்டப்பட்ட எலக்ட்ரான்கள் (SEE) தோன்றியதைக் கண்டறிந்தன.
- இந்த ஆய்வு SEE தோற்றங்களை, சூரிய சுடரொளிகள் மற்றும் சூரிய வெப்ப உமிழ்வுகளுடன் (CMEs) இணைத்து, இரண்டு வெவ்வேறு உமிழ்வுச் செயல்முறைகளை வெளிப்படுத்தியது.

- 2020 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதங்களுக்கு இடையில், இந்த விண்கலம் ஆனது பத்து உள்கல கருவிகளைப் பயன்படுத்தி 300 க்கும் மேற்பட்ட SEE நிகழ்வுகளைக் கண்டறிந்தது.
- விண்வெளியில் தாமதமான உமிழ்வு அல்லது கொந்தளிப்பு காரணமாக சூரிய நிகழ்வுகளுக்கும் SEE கண்டறிதலுக்கும் இடையிலான நேர இடைவெளி இருந்ததை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்தனர்.
- SEE நிகழ்வினை புரிந்து கொள்வது விண்வெளி வீரர்கள் மற்றும் செயற்கைக் கோள்களை சூரியக் கதிர்வீச்சிலிருந்து பாதுகாக்கவும், விண்வெளி சார்ந்த வானிலை முன்னறிவிப்பை மேம்படுத்தவும் உதவும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்


## டெப்ரிகார் வனவிலங்கு சரணாலயம்




- ஒடிசாவின் டெப்ரிகார் வனவிலங்கு சரணாலயமானது இந்தியாவின் புதிய புலிகள் வளங்காப்பகமாக மாற உள்ளது.
- இந்தச் சரணாலயத்தில், 670 ஆக இருந்த இந்தியக் காட்டெருமைகளின் எண்ணிக்கை ஆறு மாதங்களில் 700க்கும் அதிகமாக அதிகரித்துள்ளது.
- இரை இனங்களில் காட்டெருமை, சம்பார் மான், புள்ளிமான், காட்டுப்பன்றி மற்றும் காட்டு நாய்கள் ஆகியவை அடங்கும்.
- டெப்ரிகர் 100 கிலோமீட்டருக்கும் அதிகமான தூரத்திற்கு ஹிராகுட் ஈரநிலத்தின் எல்லையாக உள்ளது.
- இந்தச் சரணாலயம் ஈரநிலங்கள் மற்றும் புல்வெளிகள் முதல் காடுகள் வரையிலான பல்வேறு வாழ்விடங்களை கொண்டுள்ளது.
- இது 120 வலசை வந்த இனங்கள் உட்பட 300க்கும் மேற்பட்ட பறவை இனங்களைக் கொண்டுள்ளது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகளாவிய மனநல நெருக்கடி அறிக்கை 2025




- ❖ உலக சுகாதார அமைப்பு (WHO) ஆனது World Mental Health Today மற்றும் Mental Health Atlas 2024 எனும் இரண்டு அறிக்கைகளை வெளியிட்டது.
- ❖ உலகளவில் சுமார் 1 பில்லியனுக்கும் அதிகமான மக்கள் மனநலப் பாதிப்பு நிலைமைகளுடன் வாழ்கிறார்கள் என்பதை அறிக்கைகள் எடுத்துக்காட்டுகின்றன.
- ❖ உலகளவில் நீண்டகால இயலாமைக்கு மனநலக் கோளாறுகள் இரண்டாவது முக்கிய காரணமாக உள்ளன.
- ❖ பதட்டம் மற்றும் மனச்சோர்வு ஆகியவை உலகளவில் மிகவும் பொதுவான மனநலப் பாதிப்பு நிலைமைகள் ஆகும்.
- ❖ இந்தக் கோளாறுகள் ஒவ்வோர் ஆண்டும் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்பில் உலகளாவியப் பொருளாதார இழப்பை ஏற்படுத்துகின்றன.
- ❖ 2021 ஆம் ஆண்டில், அனைத்து நாடுகளிலும், வருமான நிலைகளிலும் சுமார் 727,000 பேர் தற்கொலை செய்து உயிரிழந்தனர்.
- ❖ அனைத்து பிராந்தியங்களிலும் இளையோர்களிடையேயான மரணத்திற்கு தற்கொலை ஒரு முக்கியக் காரணமாக உள்ளது.
- ❖ இந்தியாவில், 13.7% மக்கள் தங்கள் வாழ்நாளில் மனநலக் கோளாறுகளை அனுபவித்து உள்ளனர் என்று NIMHANS (தேசிய மனநலம் மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனம்) தெரிவித்துள்ளது.
- ❖ 2015–16 ஆம் ஆண்டிற்கான தேசிய மனநலக் கணக்கெடுப்பு, இந்திய வயது வந்த நபர்களில் 10.6% பேருக்கு மனநலப் பிரச்சினைகள் இருப்பதாகக் கண்டறிந்துள்ளது.
- ❖ இந்தியாவில் மனநலப் பிரச்சினைகள் உள்ளவர்களில் 70% முதல் 92% பேர் போதுமான சிகிச்சையைப் பெறுவதில்லை.

## NIRF தரவரிசை 2025

- தேசிய நிறுவன தரவரிசைக் கட்டமைப்பு (NIRF) இந்தியத் தரவரிசை 2025 அறிக்கையானது கல்வி அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் தொடர்ந்து ஏழாவது ஆண்டாக NIRF ஒட்டு மொத்தத் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்தது.
- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் தொடர்ந்து பத்தாவது ஆண்டாக சிறந்த பொறியியல் கல்லூரியாக தரவரிசைப்படுத்தப்பட்டது.
- பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் தொடர்ந்து பத்தாவது ஆண்டாக பல்கலைக்கழகங்கள் பிரிவில் முதலிடத்தைப் பிடித்தது.
- பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனம் தொடர்ந்து ஐந்தாவது ஆண்டாக ஆராய்ச்சி நிறுவனங்கள் பிரிவில் முன்னிலை வகித்தது.
- அகமதாபாத்தின் இந்திய மேலாண்மை கல்வி நிறுவனம் தொடர்ந்து ஆறாவது ஆண்டாக சிறந்த மேலாண்மை நிறுவனமாக இருந்தது.
- புது டெல்லியின் AIIMS தொடர்ந்து எட்டாவது ஆண்டாக மருத்துவத் தரவரிசையில் முதலிடத்தைப் பிடித்தது மற்றும் முதல் முறையாக பல் மருத்துவப் பிரிவில் முதலிடத்தைப் பிடித்தது.

### THE TOPPERS

**OVERALL**

| | 2025 | 2024 |
|---|---|---|
| 1 | IIT Madras | IIT Madras |
| 2 | IISc Bangalore | IISc Bangalore |
| 3 | IIT Bombay | IIT Bombay |
| 4 | IIT Delhi | IIT Delhi |
| 5 | IIT Kanpur | IIT Kanpur |

**ENGINEERING**

| | 2025 | 2024 |
|---|---|---|
| 1 | IIT Madras | IIT Madras |
| 2 | IIT Delhi | IIT Delhi |
| 3 | IIT Bombay | IIT Bombay |
| 4 | IIT Kanpur | IIT Kanpur |
| 5 | IIT Kharagpur | IIT Kharagpur |

**MANAGEMENT**

| | 2025 | 2024 |
|---|---|---|
| 1 | IIM Ahmedabad | IIM Ahmedabad |
| 2 | IIM Bangalore | IIM Bangalore |
| 3 | IIM Kozhikode | IIM Kozhikode |
| 4 | IIT Delhi | IIT Delhi |
| 5 | IIM Lucknow | IIM Calcutta |

**UNIVERSITIES**

| | 2025 | 2024 |
|---|---|---|
| 1 | IISc Bangalore | IISc Bangalore |
| 2 | JNU | JNU |
| 3 | Manipal Academy of Higher Education | Jamia Millia Islamia |
| 4 | Jamia Millia Islamia | Manipal Academy of Higher Education |
| 5 | Delhi University | Banaras Hindu University |

**COLLEGES**

| | 2025 | 2024 |
|---|---|---|
| 1 | Hindu College | Hindu College |
| 2 | Miranda House | Miranda House |
| 3 | Hans Raj College | St. Stephen's College |
| 4 | Kirori Mal College | Ramakrishna Mission Vivekananda Centenary College, West Bengal |
| 5 | St. Stephen's College | Atma Ram Sanatan Dharma College, Delhi |

*Source: NIRF 2025 report*

- ஐதராபாத்தின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் ஒட்டுமொத்தமாக 12வது இடத்தையும், புதுமைப் பிரிவில் 6வது இடத்தையும் பிடித்தது.
- புது டெல்லியின் ஜாமியா ஹம்டார்த், மருந்தியல் படிப்புகளில் முதல் இடத்தைப் பிடித்தது.
- ரூர்க்கியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம், கட்டிடக் கலை மற்றும் திட்டமிடல் பிரிவில் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.
- டெல்லி இந்துக் கல்லூரி தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக சிறந்த கல்லூரியாக தரவரிசைப்படுத்தப்பட்டது.
- பெங்களூரு NLSIU தொடர்ந்து எட்டாவது ஆண்டாக சட்டப் பிரிவில் முதலிடத்தைப் பிடித்தது.
- புது டெல்லியின் இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனம், வேளாண்மை மற்றும் அதனுடன் தொடர்புடைய துறைகளில் முன்னணியில் இருந்தது.

- ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம் பெங்களூருவின் இந்திய அறிவியல் கல்வி நிறுவனத்திற்கு அடுத்தபடியாகப் பல்கலைக்கழகங்களில் இரண்டாவது இடத்தைப் பிடித்தது.
- புது டெல்லியின் IGNOU (இந்திரா காந்தி தேசிய திறந்த நிலைப் பல்கலைக்கழகம்) சிறந்த திறந்தநிலைப் பல்கலைக்கழகம் ஆக தரவரிசைப்படுத்தப்பட்டது.
- புதியப் புத்தாக்கம் மற்றும் நிலையான மேம்பாட்டு இலக்குகள் பிரிவில் சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகம் முதலிடத்தில் இருந்தது.
- புனேவின் கூட்டு வாழ்வுத் திறன் மற்றும் தொழில்முறைப் பல்கலைக்கழகம் திறன் பல்கலைக்கழகங்கள் பிரிவில் முன்னிலை வகித்தது.
- 2016 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட பிரிவுகளுடன் தொடங்கிய NIRF தரவரிசை 2025 ஆம் ஆண்டிற்குள் ஒன்பது பிரிவுகள் மற்றும் எட்டு பாட களங்களுக்கு விரிவுப்படுத்தப் பட்டது.

# மாநிலச் செய்திகள்

## பொது நலனுக்கான சிறப்பு செயற்கை நுண்ணறிவு மையம்



- ஆந்திரப் பிரதேச அரசானது விசாகப்பட்டினத்தில் ஒரு சிறப்பு செயற்கை நுண்ணறிவு (AI) மையத்தை அமைப்பதற்காக டெக் பாரத் அறக்கட்டளையுடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.
- இந்த முன்னெடுப்பினை ஆந்திரப் பிரதேச அரசின் தகவல் தொழில்நுட்பம், மின்னணுவியல் மற்றும் தகவல் தொடர்புத் துறை (ITE மற்றும் C) வழிநடத்துகிறது.
- சிறப்பு செயற்கை நுண்ணறிவு மையம் (CoE) ஆனது பல நிறுவனங்களால் இணைந்து உருவாக்கப்பட்ட கருவிகள், கொள்கை ஆராய்ச்சி மற்றும் பயன்பாட்டுத் தீர்வுகள் மூலம் பொது நிர்வாகத்திற்கான செயற்கை நுண்ணறிவில் கவனம் செலுத்தும்.

## தினசரி வேலை நேர நீட்டிப்பு

- தனியார் துறை ஊழியர்களுக்கான அதிகபட்சத் தினசரி வேலை நேரத்தை ஒன்பது மணி நேரத்திலிருந்து பத்து மணி நேரமாக அதிகரிக்க மகாராஷ்டிரா அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- இதற்காகத் தொழிற்சாலைகள் சட்டம், 1948 மற்றும் மகாராஷ்டிரா கடைகள் மற்றும் நிறுவனங்கள் (வேலைவாய்ப்பு மற்றும் சேவை நிபந்தனைகளை ஒழுங்குபடுத்துதல்) சட்டம், 2017 ஆகியவற்றில் திருத்தங்கள் செய்யப்படும்.

- இதனால் கூடுதல் வேலை நேர வரம்புகள் அதிகரிக்கும் என்பதோடு மேலும் தொழிலாளர்கள் கட்டாய எழுத்துப்பூர்வ ஒப்புதலுடன் அதற்கான சரியான இழப்பீட்டைப் பெறுவார்கள்.
- இந்த மாற்றங்கள் முதலீட்டை ஈர்ப்பது, வேலைவாய்ப்பை உருவாக்குவது மற்றும் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★